# பெரியாழ்வார் திருமொழி 1-2
## சீதக்கடல்
(கண்ணனது திருமேனி அழகைப் பாதாதிகேசாந்தமாக அனுபவித்தல்)

23 * சீதக்கடலுள் * அமுதன்ன தேவகி *
கோதைக் குழலாள் * அசோதைக்குப் போத்தந்த **
பேதைக் குழவி * பிடித்துச் சுவைத்துண்ணும் *
பாதக் கமலங்கள் காணீரே * பவளவாயீர் வந்து காணீரே (1)

24 முத்தும் மணியும் * வயிரமும் நன்பொன்னும் *
தத்திப் பதித்துத் * தலைப்பெய்தாற்போல் ** எங்கும்
பத்து விரலும் * மணிவண்ணன் பாதங்கள் *
ஒத்திட்டிருந்தவா காணீரே * ஒண்ணுதலீர் வந்து காணீரே (2)

25 பணைத்தோள் இளவாய்ச்சி * பால்பாய்ந்த கொங்கை *
அணைத்தார உண்டு * கிடந்த இப்பிள்ளை **
இணைக்காலில் வெள்ளித் * தளை நின்றிலங்கும் *
கணைக்கால் இருந்தவா காணீரே * காரிகையீர் வந்து காணீரே (3)

26 உழந்தாள் நறுநெய் * ஓரோர் தடா உண்ண *
இழந்தாள் எரிவினால் * ஈர்த்தெழில் மத்தின் **
பழந்தாம் பாலோச்சப் * பயத்தால் தவழ்ந்தான் *
முழந்தாள் இருந்தவா காணீரே * முகிழ்முலையீர் வந்து காணீரே (4)

27 பிறங்கிய பேய்ச்சி * முலை சுவைத்துண்டிட்டு *
உறங்குவான் போலே * கிடந்த இப்பிள்ளை **
மறங்கொள் இரணியன் * மார்பை முன் கீண்டான் *
குறங்குகளை வந்து காணீரே * குவிமுலையீர் வந்து காணீரே (5)

28 மத்தக் களிற்று * வசுதேவர் தம்முடை *
சித்தம் பிரியாத * தேவகி தன் வயிற்றில் **
அத்தத்தின் பத்தா நாள் * தோன்றிய அச்சுதன் *
முத்தம் இருந்தவா காணீரே * முகிழ்நகையீர் வந்து காணீரே (6)

29 இருங்கை மதகளிறு * ஈர்க்கின்றவனை *
பருங்கிப் பறித்துக் * கொண்டோடு பரமன் தன் **
நெருங்கு பவளமும் * நேர்நாணும் முத்தும் *
மருங்கும் இருந்தவா காணீரே * வாணுதலீர் வந்து காணீரே (7)

30 வந்த மதலைக் * குழாத்தை வலிசெய்து *
தந்தக் களிறு போல் * தானே விளையாடும் **
நந்தன் மதலைக்கு * நன்றும் அழகிய *
உந்தி இருந்தவா காணீரே * ஒளியிழையீர் வந்து காணீரே (8)

31 அதிரும் கடல்நிற வண்ணனை * ஆய்ச்சி
மதுர முலையூட்டி * வஞ்சித்து வைத்து **
பதரப் படாமே * பழந்தாம் பாலார்த்த *
உதரம் இருந்தவா காணீரே * ஒளிவளையீர் வந்து காணீரே (9)

32 பெருமா உரலில் * பிணிப்புண்டிருந்து * அங்கு
இருமா மருதம் * இறுத்த இப்பிள்ளை **
குருமா மணிப்பூண் * குலாவித் திகழும் *
திருமார்பு இருந்தவா காணீரே * சேயிழையீர் வந்து காணீரே (10)

33 நாள்களோர் நாலைந்து * திங்கள் அளவிலே *
தாளை நிமிர்த்துச் * சகடத்தைச் சாடிப்போய் **
வாள்கொள் வளை எயிற்று * ஆருயிர் வவ்வினான் *
தோள்கள் இருந்தவா காணீரே * சுரிகுழலீர் வந்து காணீரே (11)

34 மைத்தடங்கண்ணி * யசோதை வளர்க்கின்ற *
செய்த்தலை நீல நிறத்துச் * சிறுப்பிள்ளை **
நெய்த்தலை நேமியும் * சங்கும் நிலாவிய *
கைத்தலங்கள் வந்து காணீரே * கனங்குழையீர் வந்து காணீரே (12)

35 வண்டமர் பூங்குழல் * ஆய்ச்சி மகனாகக் *
கொண்டு வளர்க்கின்ற * கோவலக் குட்டற்கு **
அண்டமும் நாடும் * அடங்க விழுங்கிய *
கண்டம் இருந்தவா காணீரே * காரிகையீர் வந்து காணீரே (13)

36 எந்தொண்டைவாய்ச் சிங்கம் * வாவென்றெடுத்துக் கொண்டு *
அந்தொண்டைவாய் * அமுதாதரித்து * ஆய்ச்சியர்
தம் தொண்டைவாயால் * தருக்கிப் பருகும் * இச்
செந்தொண்டைவாய் வந்து காணீரே * சேயிழையீர் வந்து
காணீரே (14)

37 நோக்கி யசோதை * நுணுக்கிய மஞ்சளால் *
நாக்கு வழித்து * நீராட்டும் இந் நம்பிக்கு **
வாக்கும் நயனமும் * வாயும் முறுவலும் *

மூக்கும் இருந்தவா காணீரே * மொய்குழலீர் வந்து காணீரே (15)

38 விண்கொள் அமரர்கள் * வேதனை தீர * முன்
மண்கொள் வசுதேவர் தம் * மகனாய் வந்து **
திண்கொள் அசுரரைத் * தேய வளர்கின்றான் *
கண்கள் இருந்தவா காணீரே * கனவளையீர் வந்து காணீரே (16)

39 பருவம் நிரம்பாமே * பாரெல்லாம் உய்ய *
திருவின் வடிவொக்கும் * தேவகி பெற்ற **
உருவு கரிய * ஒளி மணிவண்ணன் *
புருவம் இருந்தவா காணீரே * பூண்முலையீர் வந்து காணீரே (17)

40 மண்ணும் மலையும் * கடலும் உலகேழும் *
உண்ணும் திறத்து * மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு **
வண்ணம் எழில்கொள் * மகரக் குழை இவை *
திண்ணம் இருந்தவா காணீரே * சேயிழையீர் வந்து காணீரே (18)

41 முற்றிலும் தூதையும் * முன் கைம்மேல் பூவையும் *
சிற்றில் இழைத்துத் * திரிதருவோர்களை **
பற்றிப் பறித்துக் * கொண்டோடும் பரமன் தன் *
நெற்றி இருந்தவா காணீரே * நேரிழையீர் வந்து காணீரே (19)

42 அழகிய பைம்பொன்னின் * கோல் அங்கைக் கொண்டு *
கழல்கள் சதங்கை * கலந்தெங்கும் ஆர்ப்ப **
மழகன்றினங்கள் * மறித்துத் திரிவான் *
குழல்கள் இருந்தவா காணீரே * குவிமுலையீர் வந்து காணீரே (20)

43 * சுருப்பார் குழலி * யசோதை முன் சொன்ன *
திருப்பாத கேசத்தைத் * தென்புதுவைப் பட்டன் **
விருப்பால் உரைத்த * இருபதோடொன்றும்
உரைப்பார் போய் * வைகுந்தத் தொன்றுவர் தாமே (21)